பக்கங்கள் 19+3

# மாலை முரசு

## மாவையின் புகழுடலுக்கு சி.வி.கே. நேரில் அஞ்சலி



(விரிவான செய்தி 5 ஆம் பக்கத்தில்)

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 17 வியாழக்கிழமை 30.01.2025 | அதிர்வு 182

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### யாழ். மாவிட்டபுரத்தில் வைக்கப்பட்டுள்ள

# மாவையின் புகழுடலுக்கு தமிழர் திரண்டு அஞ்சலி!

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக யாழ். மாவிட்டபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இன்று காலை மாவை சேனாதிராஜாவின் பூதவுடலுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞானமுத்து ஸ்ரீநேசன், கவீந்திரன் கோடீஸ்வரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பாக்கியசெல்வம் அரியநேத்திரன், சீனித்தம்பி யோகேஸ்வரன் மற்றும் கட்சியின் பொருளாளர் பெரியதம்பி கனகசபாபதி ஆகியோரால் கட்சியின் கொடி போர்த்தப்பட்டு மதிப்பளிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

02 ▶





# மாவையின் புகழுடலுக்கு தமிழர் திரண்டு அஞ்சலி!










**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

அத்தோடு மதத் தலைவர்கள், கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

1942 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி பிறந்த மாவை சேனாதி ராஜா சிகிச்சை பலனின்றி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று இரவு காலமானார்.





# மாவை சேனாதிராஜாவின் புகழுடலுக்கு இந்தியத் துணைத் தூதுவர் அஞ்சலி!

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதி ராஜாவின் புகழுடலுக்கு யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதர் சாய் முரளி அஞ்சலி செலுத்தினார்.

அத்தோடு அரசியல் பிரமுகர்கள், வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் தொடர்ந்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.















# சேனாதிராஜாவின் மறைவு தமிழர்களுக்குப் பேரிழப்பு!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் இரங்கல்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜா வின் மறைவு தமிழர்களுக்குப் பேரி ழப்பாகும் என்று இலங்கை நாடாளு மன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரு மான சஜித் பிரேமதாஸ தெரிவித் துள்ளார்.

அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தி யில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"இலங்கைத் தமிழரசுக் கட்சி யின் மறைந்த மூத்த தலைவர் மாவை சேனாதிராஜா தனது ஐந்து தசாப்தகால அரசியல் வாழ்க்கையில், அறவழிப் போராட்டம், சிறைவாசம் எனத் தமிழ் மக்களுக்களின் உரிமைக்காகக் குரல் எழுப்பி வந்தார். அவரின் மறைவானது தமிழ் மக்களுக்குப் பேரிழப்பாகும்.

அன்னாரது மறைவுச் செய்தி பெரும் மன வேதனையையும் ஆழ்ந்த கவலை யையும் ஏற்படுத்தியுள்ளது. அன்னா ரின் மறைவானது தமிழரசுக் கட்சிக்கும், தமிழ் மக்களுக்கும் பேரிழப்பாகும்.

1942 ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்த மாவை சேனாதிராஜா, அரசியல் மற்றும் பொதுச் சேவை ஆகியவற்றில் தனது வாழக் கையை அர்ப்பணித்திருந்தார். அவர் ஒரு சிறந்த அரசியல்வாதியும், திறமை யான பேச்சாளரும், தைரியமான மனித உரிமைகள் செயற்பாட்டாளருமாவார்.

மாவை சேனாதிராஜா தனது 19 ஆவது வயதில் அரசியல் பயணத்தைத் தொடங்கி தனது 83 ஆவது வயது வரை தமிழ் மக்களுக்காகத் தனது வாழ்வை அர்ப்பணித்தார்.

போருக்கு முன்னரும் பின்னரும் அவரது அரசியல் செயற்பாடுகள் பல்வேறு பரிணாமங்களைக் கொண் டுள்ளன. அவர் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளை கண்டித்து போராடி சிறைவாசமும் அனுபவித்தவர்.

தனது அரசியல் வாழ்க்கையில், அநீதிக்கு எதிராகவும், நீதிக்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக் காகவும் துணிந்து குரல் கொடுத்த மாவை சேனாதிராஜா, இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவராக கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை ஏறக்குறைய 10, வருடங்கள் தலைவராக செயற்பட்டு, ஆட்சியாளர்களின் அடக்குமுறைக்கு எதிராகக் கடுமையாகப் போராடினார்.

அரசியலின் மீதான அவரது ஆர்வம் அவரை தமிழ் அரசியலில் மிகவும் வெற்றிகரமான மற்றும் மரியாதைக் குரிய தலைவர்களில் ஒருவராக திகழச் செய்தது. தமிழ் அரசியலில் மாத்திர மின்றி தேசிய அரசியலிலும் அசாத் தியமான திறமையும், துணிச்சலும், தொலைநோக்குப் பார்வையும் கொண்ட வராகத் திகழ்ந்தார்.

பயங்கரவாத அச்சுறுத்தலால் பாதிக் கப்பட்டு அழிந்து கொண்டிருந்த ஒரு தேசத்தில், அச்சமற்ற மற்றும் அர்ப் பணிப்புள்ள தலைவராக உருவெடுத் தார். எப்போதும் தமிழ் மக்களை ஒன்றிணைக்கவும் பொதுவான நிலை யைக் கண்டறியவும் முயற்சித்தார். தமிழர் அரசியல் பரப்பில் மாவை ஒரு யதார்த்தவாதியாக திகழ்ந்தார். பொது வான இலங்கை அடையாளத்தில் வேற்றுமையில் ஒற்றுமையை காணும் பயணத்தை நம்பினார்.

சுதந்திரம் கிடைத்து 77 ஆவது ஆண்டு நிறைவுறும் தருணத்தில், தனித்துவங்களை பாதுகாத்துக் கொண்டு பிரச்சினையாக இருந்து வரும் அனைவரையும் உள்ளடக்கிய இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்பும் விடயத்தில் புதிய உபாயங்கள் மூலம் வெளிப்படையான பிரவேசத்துக்கான நடவடிக்கைகளை எடுப்பதே மாவை சேனாதிராஜாவுக்கு நாமளிக்கும் சிறந்த கௌரவமாகும்.

அன்னாரின் பிரிவால் துயர் உற்றி ருக்கும் குடும்பத்தினருக்கும் ஆதரவா ளர்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையிலும், ஐக்கிய மக்கள் சக்தி கட்சி சார்பாகவும் எனது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக்கொள் கின்றேன்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்." – என்றுள்ளது.

# ஒரு தமிழ்த் தேசிய அடையாளமே மாவை!

## அனுதாபச் செய்தியில் மனோ எம்.பி.

சிரேஷ்ட தமிழ் அரசியல்வாதி, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற தகைமைகளுக்கு அப்பால், அண்ணன் மாவை, ஒரு தமிழ்த் தேசிய அடையாளம் என்பது நிதர்சனம் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணே சன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜா வின் மறைவு தொடர்பில் மனோ கணே சன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்



மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"மிக நீண்ட காலமாகத் தமிழர் ஜன நாயக சாலையில் பயணித்த, மாவை சேனாதிராஜா என்ற தமிழ்த் தேசிய வாகனம் நின்று விட்ட சம்பவம் இன்று நிகழ்ந்தே விட்டது. பல உணர்வு மிக்க தரிப்பிடங்களையும், கடவைகளையும், தமிழ்த் தேசிய அரசியல் தலைவர்களு டன் நான் கடந்து வந்துள்ளேன். இதிலேயே அண்ணன் மாவையுடன் மிக நீண்ட காலமாக நான் பயணித்தும் உள்ளேன்.

இன்றைய இந்தச் சோகத்தில், தமிழ் முற்போக்குக் கூட்டணியாக நாம் பங்கு கொள்கின்றோம். எங்கள் அனுதாபங் களை அவரை இழந்து வாடும் அவரது குடும்ப அங்கத்தவர்களுக்கும், அவரது கட்சிக்கும், மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்." – என்றுள்ளது.



# மாவையின் புகழுடலுக்கு சி.வி.கே. நேரில் அஞ்சலி

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் புகழுடலுக்குக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் அஞ்சலி செலுத்தினார்.

அதேவேளை, தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் மாவையின் புகழுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.















# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பொறுப்போடு செயற்படுக!

இலங்கையும் இந்தியாவும் சிறிய கடல் நீரிணையால் பிரிக்கப்பட்ட இரண்டு அயல் நாடுகள்.

இந்தக் குறுகிய நீரிணை எல்லைப் பிரிப்பு என்பது நெருக்கடி மிகுந்த ஒரு விடயம். இந்தப் பிரதேசத்தில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் தத்தமது நாடுகளின் எல்லையைத் தாண்டுவது பல சமயங்களில் தவிர்க்க முடியாததாகி விடுவதுண்டு.

இந்த விடயத்தை கையாள்வதில் சம்பந்தப்பட்ட இரண்டு நாடுகளும் - குறிப்பாக அவற்றின் இரண்டு கடற்படைகளும் - மிகுந்த கவனத்தோடு செயல்பட வேண்டும்.

எல்லை மீறும் மீனவர்களை 'எடுத்தோம், கவிழ்த்தோம்' என்று கையாண்டு விட முடியாது.

இந்தியாவின் - குறிப்பாகத் தமிழகத்தின் - மீனவர்களின் எல்லை மீறலும், அவர்களின் மீன்பிடி முறைமைகளும் இலங்கைக் கடல் எல்லைக்குள் தொழிற்செய்யும் இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரங்களையும் கடலின் ஆதாரங்களையும் முழுமையாக அழிக்கின்றன என்ற யதார்த்தம் இலங்கை மீனவர்களைக் கடுப்புக்குள் உள்ளாக்கி இருப்பதும் உண்மை.

இரண்டு மீனவர்களும் ஒரு கடற்பிராந்தியத்தில் தொழில் செய்வதும் அதையொட்டி முரண்பாடுகள் வெடிப்பதும் புதிய விடயங்கள் அல்ல. நீண்ட பல தசாப்தங்களாக நீடிக்கும் பிரச்சினைதான் இது.

உயிரைத் துச்சம் என மதித்து, கடலில் இறங்கித் தொழில் செய்யும் மீனவர்களின் வாழ்வாதாரம் சம்பந்தப்பட்ட விவகாரம் இது என்பதனால் அதனை வன்முறைப் போக்கில் கையாள்வது பொருத்தமற்றது. தவறானது.

எல்லை தாண்டி மீன்பிடித்தனர் எனக் குறிப்பிட்டு காரைக்கால் மற்றும் தமிழக மீனவர்கள் 13 பேரை கைது செய்த இலங்கைக் கடற்படையினர் அச்சமயம் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியமை தமிழகத்தில் பெரும் அதிர்ச்சி அலைகளையும் சீற்றத்தையும் ஏற்படுத்தி இருக்கின்றது.

இச்சம்பவத்தில் இரண்டு மீனவர்கள் படு காயமடைந்துள்ளனர். மற்றும் இருவர் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

இச்சம்பவத்திற்கு இந்தியா உத்தியோகபூர்வமாகக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் வெளியுறவுத்துறை அமைச்சகம் புதுடில்லியில் உள்ள இலங்கை தூதரை நேரில் அழைத்து, மீனவர்கள் மீதான துப்பாக்கிப் பிரயோகம் ஏற்புடையது அல்ல, இவ் விடயத்தில் உரிய வழிமுறைகளை பின்பற்ற வேண்டும் என கண்டிப்பாகக் கூறியுள்ளது.

இதே விடயத்தை இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகமும் இலங்கை அரசுக்குக் காட்டமான தொனியில் தெரிவித்துள்ளது என்றும் கூறப்படுகின்றது.

இவ் விடயம் தொடர்பிலான முதற்கட்ட விசாரணையில் இலங்கை கடற்படை வீரர் ஒருவரினால் தற்செயலாக நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டினால் இரண்டு இந்திய மீனவர்களும் காயமடைந்தனர் எனத் தெரியவந்துள்ளதாக இலங்கைக் கடற்படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

ஆயினும், இந்தப் பதில் ஏற்புடையதாகவோ அல்லது நியாயத்தன்மை கொண்டதாகவோ தென்படவில்லை என்பது வெளிப்படையானது.

மீனவர்களின் எல்லை மீறும் நடவடிக்கை சட்டவிரோதமானது என்றாலும் அதை சட்டரீதியாகக் கையாள்வதே முறையானது. இரண்டு நாடுகள் சம்பந்தப்பட்ட விடயம் என்பதால் மிகுந்த கவனத்தோடும் இது கையாளப்பட வேண்டும். அதே சமயம் இரண்டு நாடுகளில் உணர்வலைகளை எழுப்பக்கூடிய விவகாரம் என்பதால் மேலும் பொறுப்புணர்வு கட்டாயமானதாகும்.

இரவில் புற்றீசல்கள் போல பல்வேறு படகுகளில் ஒரே சமயத்தில் கூட்டமாக எல்லை மீறும் மீனவர்களை கையாள்வது என்பது இலங்கைக் கடற்படையினருக்குச் சிக்கல் மிகுந்ததாக இருந்தாலும், அது தொடர்பில் உரிய வழிமுறைகள், சட்ட ரீதியான செயல்பாடுகள் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

எல்லை மீறும் விடயத்தில் இந்திய மீனவர்கள் பக்கத்தில் பெரும் தவறு இருந்தாலும், இலங்கைக் கடற்படை சட்டரீதியாக செயற்பட்டு, இருநாட்டு உறவுகளும் குழம்பி விடாமல் பார்த்துக் கொள்வது அடிப்படையான-கட்டாயமான - விடயமாகும்.

சம்பந்தப்பட்ட அரசியல் தரப்புக்களும், அதிகாரத் தரப்புகளும் இவ்விடயத்தை பொறுப்புணர்வோடு தொடர்ந்து முன்னெடுப்பதுதான் தேவையற்ற பதற்றத்தைத் தவிர்க்கச் செய்யும்.

# மாவை சேனாதிராஜாவின் மறைவு தமிழ் மக்களுக்கு பாரிய இழப்பு!

## இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் இரங்கல் !

தமிழ் தேசிய அரசியல் பரப்பில் ஆளுமையாக செயல்பட்ட இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவின் மறைவு தமிழ் மக்களுக்கு பாரிய இழப்பாகும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாவை சேனாதிராஜா தனது 19 வயதில் அரசியல் பயணத்தை தொடங்கி 83 வயது வரை முழுநேர அரசியல் தலைவராக தமிழ் மக்களுக்காகப் பணியாற்றியுள்ளார்.



போருக்கு முன்னரும் பின்னரும் என இவரது அரசியல் நகர்வுகள் பல்வேறு பரிணாமங்களை கொண்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினராக செயற்பட்ட காலத்திலும் இவரது பணி காத்திரமாக இருந்தது.

தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளைக் கண்டித்துப் போராடி சிறைவாசமும் அனுபவித்தவர் மாவை சேனாதிராஜா. அன்னாரின் இழப்பு தமிழர்களின் அரசியல் பரப்புக்கு பேரிழப்பாகும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும் மாவை சேனாதிராஜாவுக்கும் மிக நெருங்கிய உறவு இருந்தது. அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான், அமரர் ஆறுமுகன் தொண்டமான் காலம் முதல் இந்த உறவு தொடர்ந்தது. மலையக தமிழ் மக்களுக்காக இ.தொ.காவுடன் இணைந்து அவர் பல சந்தர்ப்பங்களில் குரல் கொடுத்துள்ளார்.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்துக்கும் உறவுகளுக்கும் மக்களுக்கும் இ.தொ.கா சார்பாக தனது இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன், அவர் விட்டு சென்ற பணிகளை தமிழரசு கட்சி தொடர வேண்டும்.- என்றும் செந்தில் தொண்டமான் தனது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# மாவை தமிழினத்தின் அரசியல் விடிவுக்காக இறுதிவரை போராடிய அரசியல் போராளி!

## தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சத்தியலிங்கம் இரங்கல்

சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கையின் வரலாற்றில் ஈழத் தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்காக இறுதிவரை போராடிய ஒரு உன்னதமான போராளி அமரர் மாவை சேனாதிராஜா என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும், மூத்த அரசியல் வாதியும், யாழ் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராஜாவின்; மறைவை அடுத்துக் கட்சியின் பொதுச் செயலாளரால் வெளியிடப்பட்டுள்ள இரங்கல் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மாவை அண்ணர் என்று அனைவராலும் வயது வித்தியாசமின்றி அன்பாக அழைக்கப்பட்டவர் மாவை சோ.சேனாதிராஜா. யாழ்ப்பாண மண்ணின் புகழ்பூத்த மாவிட்டபுரத்தில் பிறந்த சோ.சேனாதிராஜா, ஊரின் பெயருக்குப் பெருமை சேர்த்தவராக மாவை சேனாதிராஜா என்று அனைவராலும் அழைக்கப்பட்டார்.

1961 ஆம் ஆண்டு; தமிழ் மக்களுக்கு எதிரான அரசின் அரசியல் அடக்குமுறைகளுக்கு எதிராக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் தந்தை செல்வாவின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தில் தனது 19 ஆவது வயதில் இணைந்து போராடினார். அத்துடன் அன்னாரது அரசியல் பயணம் ஆரம்பமாகியது. இறுதி மூச்சுவரை தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்காக ஜனநாயக ரீதியில் போராடியவர் மாவை சேனாதிராஜா.





1962 ஆம் ஆண்டு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் அணியில் சேர்ந்து முழுநேர அரசியல் பயணத்தை ஆரம்பித்த மாவை சேனாதிராஜா, 1966 முதல் 1969 வரையில் ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்தில் செயலாளராகவும் 1972 இல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ் இளைஞர் பேரவையின் செயலாளராகவும் துடிப்புடன் செயற்பட்டவர்.

1989 இல் முதன் முறையாக நாடாளுமன்ற அரசியல் பிரவேசத்தை ஆரம்பித்து 2020 வரையில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்காக நாடாளுமன்றத்தில் ஜனநாயக வழியில் குரல் கொடுத்தவர். தனது அரசியல் பயணத்தில் பலதடவைகள் சிறைவாசம் சென்றதுடன் தேர்தல் காலங்களில் அரசியல் எதிரிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி படுகாயமடைந்த நிலையிலும் அரசியல் பணிகளை முன்னெடுத்த மாபெரும் தலைவர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் அ.அமிர்தலிங்கத்தின் மறைவுக்குப் பின்னர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் பல்வேறு பதவிகளை வகித்துக் கட்சியை வழிநடத்தியவர்.

2004 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டுவரையில் கட்சியின் செயலாளராக 10 வருடங்கள் பணியாற்றினார். 2014 ஆம் ஆண்டு வவுனியாவில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டில் கட்சியின் தலைவராக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். 2024 ஆம் ஆண்டுவரையில் ஏறத்தாள 10 வருடங்கள் கட்சியின் தலைவராக வழிநடத்தியவர்.

அன்னாரின் இழப்பு இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு பாரிய இழப்பாகும். அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.- என்றுள்ளது.



# முத்தரிப்புத்துறை மரியாள் முன்பள்ளியின் குறைபாடு தொடர்பில் ஆராய்ந்த ரவிகரன்!

(விஜயரத்தினம் சரவணன்)

மன்னார் – முசலி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட முத்தரிப்புத் துறையில் அமைந்துள்ள புனித மரியாள் முன்பள்ளிக்கு நேரடியாகச் சென்ற வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் குறித்த முன்பள்ளியில் காணப்படும் வளப்பற்றாக் குறைகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

இந்த முன்பள்ளியில் தற்போது 95 சிறார்கள் கல்வி கற்றுவரும் நிலையில், நான்கு ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டுவருகின்றனர்.

முன்பள்ளிக்கென ஒரு கட்டடம் மட்டுமே காணப்படுகிறது. அனைத்து மாணவர்களையும் குறித்த ஒரே கட்டடத்தில் வைத்துக் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதில் இடர்பாடுகள் காணப்படுகின்றன என்று இதன்போது ஆசிரியர்களால் சுட்டிக்காட்டப்பட்டது. எனவே குறித்த முன்பள்ளிக்கென மற்றுமொரு கட்டடம் அமைத்துத் தருமாறு முன்பள்ளி ஆசிரியர்களால் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அத்தோடு குறித்த முன்பள்ளியில் கடந்த 15 வருடங்களாக கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் குறைந்த ஊதியத்துடனேயே கல்வி கற்பிக்கின்றனர். தொடர்ந்து 90 சிறார்களுக்கு குறையாமல் கல்விகற்பிக்கும் செயற்பாட்டில் ஈடுபடுவதாகவும் முன்பள்ளி ஆசிரியர்களால் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. தமக்கான மாதாந்த உதவு தொகை வழங்குமாறும் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கைகள் அடங்கிய மகஜரும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் கையளிக்கப்பட்டது.

முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் தாம் உரிய கவனம் செலுத்துவார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது தெரிவித்தார்.

# சட்டவிரோதமாகப் பனை மரங்களை தறித்தவர்கள் தொடர்பில் முறைப்பாடு


(த.சுபேசன்)

உரிய அனுமதியின்றி சட்டவிரோதமாக பனை மரங்களைத் தறித்த ஆலய நிர்வாகம் மற்றும் தனியார் மீது பனை அபிவிருத்திச் சபையால் செவ்வாய்கிழமை பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதி ஒன்றில் அனுமதியின்றி 10 பனை மரங்களைத் தறித்த ஆலய நிர்வாகம் மீதும், அதேவேளை தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பன்னாலைப் பகுதியில் சட்டவிரோதமாக 6 பனை மரங்களை வெட்டிய தனியார் ஒருவர் மீதும் பொலிஸ் நிலையங்களில் பனை அபிவிருத்திச் சபையால் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.






EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



# ஈழத்தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை; புதுடில்லியில் பன்னாட்டுக் கருத்தரங்கம்!

ஈழத்தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பில் புதுடில்லியில் பன்னாட்டுக் கருத்தரங்கம கடந்த திங்கள்கிழமை இடம்பெற்றது.

டில்லிப் பல்கலைக்கழக நவீன இந்திய மொழிகள் மற்றும் இலக்கிய ஆய்வுகள் துறையும், ஆஸ்திரேலிய தமிழர் பேரவையும் இணைந்து ஒருங்கிணைத்த "இலங்கைத் தமிழர்கள் மற்றும் காஷ்மிர் பண்டிட்கள் எதிர்கொள்ளும் பாதிப்புகள் மற்றும் உயிர் பிழைத்தலின் பாலினம் சார்ந்த பெருங்கதையாடல்கள்" எனும் பொருண்மையிலான பன்னாட்டுக் கருத்தரங்கம் நடைபெற்றது. நிகழ்வில், கருத்தரங்குக்குச் சமர்ப் பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் ஆய்வுச் சுருக்கங்கள் அடங்கிய நூல் வெளியிடப்பட்டது.

கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர். தி. உமாதேவி, ஆஸ்திரேலிய தமிழர் பேரவையின் தலைவர் கிருஷ்ணபிள்ளை இளங்கோ, அமெரிக்கத் தமிழர் செயற்பாட்டுக் குழுவின் செயலாளர் சுந்தர் குப்புசாமி, தமிழர் புலம்பெயர் அமைப்புகளின் இந்திய ஒருங்கிணைப்பாளர் கதிரவன், கலைப் புலத் தலைவர் பேராசிரியர் அமிதாவ சக்ரபார்த்தி, அதிதி மகாவித்யாலயா கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் மம்தா சர்மா ஆகியோர் வெளியிட்டனர்.

இந்தப் பன்னாட்டுக் கருத்தரங்கில், புலம்பெயர்வு, அடையாள இழப்பு, அகதிகள் மறுவாழ்வு முகாம், போருக்குப் பின்னரான மன உளைச்சல், பாலினம் – அதிகாரம் – ஒடுக்கு முறை, கட்டாயப் படுத்தப்பட்ட புலம்பெயர்வின் பொருளாதார விளைவுகள் போன்ற கருப் பொருள்களில் 42 ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கப்பட்டன.



# ஆலயங்கள் அதிகரித்தும் ஆன்மீகம் ஏன் வளரவில்லை?

## இலங்கை கல்வி அபிவிருத்திக் குழுமக் காப்பாளர் சச்சிதானந்தன் கேள்வி

(த.சுபேசன்)

ஆலயங்கள் கடந்த காலங்களை விட வெகுவாக அதிகரித்து வருகின்ற போதிலும் ஆன்மீகம் வளர்ந்து அதனூடாக குற்றச்செயல்கள் குறைந்ததாக தெரியவில்லை.

இலங்கை கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் காப்பாளர் ந.சச்சிதானந்தன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இன்று சமூகத்தில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் மது மற்றும் போதைவஸ்துப் பாவனைக்கு அடிமையாவது அதிகரித்துள்ளது.

இதனால் களவு, கொலை உள்ளிட்ட சட்டவிரோதச் செயல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இளம் பராயத்தினர் மாத்திரமல்ல அதிகாரிகள் கூட லஞ்சம் - ஊழல் என பாரிய சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

முன்பள்ளிப் பராயத்தில் இருந்து நல்ல பழக்கவழக்கங்களை ஏற்படுத்துவதன் ஊடாகவே இவ்வாறான சமூகத்துக்கு ஒவ்வாத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முடியும்.

எமது பிரதேசங்களில் மக்கள் தொகை வெகுவாகக் குறைந்து விட்டது. ஆனால் ஆலயங்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளன.

அத்துடன் திருவாசக அரண்மனை, திருக்குறள் அரண்மனை, திருமந்திர அரண்மனை எனக் கட்டி கும்பாபிஷேகம் செய்யப்படுகின்றன.



இவ்வாறு ஆலயங்கள் அதிகரித்து ஆன்மீகம் வளர்ந்திருந்தால் குற்றச்செயல்கள் குறைந்திருக்க வேண்டும். ஆனால் சமூகத்தில் குற்றச்செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்தே காணப்படுகின்றன.- என்றார்.





# தொழில் துறையினர் சந்திப்பு!

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தொழில் துறையினருக்கும், கைத்தொழில் துறைகள் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்திக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று (29) திருகோணமலை மாவட்ட அரச அதிபர் டபிள்யூ. ஜி. எம். ஹேமந்த குமாரவின் ஏற்பாட்டில், திருகோணமலையில் நடைபெற்றது.

கிழக்கு பிராந்திய கைத்தொழில் சேவை நிலைய பணிப்பாளர் கே. தயாபாரனின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடல் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

தொழில் துறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அளித்துவரும் பங்களிப்பை அதிகரிப்பது, கைத்தொழில் துறைகள் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். அந்த வகையில் கைத்தொழில் துறையில் உள்ள முக்கிய பிரச்சினைகளை அடையாளம் காணும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள தொழில் துறையினர் எதிர்கொள்ளும் தடைகளை அடையாளம் கண்டு அதற்கான தீர்வுகளும் இந்தக் கலந்துரையாடலின் போது வழங்கப்பட்டது.

தொழில் துறையினரால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் அமைச்சர் தக்க பதில்களையும் இதன்போது வழங்கினார்.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் வெளிவிவகார, வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதி அமைச்சருமாகிய அருண் ஹேமச்சந்திரா, நாடாளுமன்ற உறுப்பினர் அக்மீமன கமகே ரொஷான் பிரியசஞ்சன, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர் மற்றும் பணிப்பாளர் உட்பட தொழில் துறையினர் பலரும் கலந்து கொண்டனர்.

### கனகாம்பிகைக் குளத்துக்கென

# இந்துபுரத்தில் 65 காணிகளை வீடுகளுடன் அபக்கரிக்க முயற்சி!

### நிலமைகளை நேரில்சென்று ஆராய்ந்தார் ரவிகரன் எம்.பி.

(விஜயரத்தினம் சரவணன் )

கிளிநொச்சி – மாவட்டத்துக்கு உரிய கனகாம்பிகைக் குளத்தின் ஒதுக்கீட்டுக் காணிகள் எனத் தெரிவித்து முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட எல்லைக் கிராமங்களில் ஒன்றான இந்துபுரம் கிராமத்தில் உள்ள மக்களின் தனியார் உறுதி மற்றும் அரச உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்ட காணிகள் மக்கள் குடியிருக்கும் வீடுகளுடன் அபகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களாத்தால் இவ்வாறு எல்லைக் கற்கள் இடப்பட்டு ஆக்கிரமிப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் இந்துபுரம் கிராமத்தைச் சேர்ந்த 65 குடும்பங்களின் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இந்துபுரம் கிராமத்துக்கு நேரடியாகச் சென்ற வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், இந்த அபகரிப்பு முயற்சி தொடர்பில் ஆராய்ந்தார். நீர்ப்பாசனத் திணைக்களத்தின் இந்த அடாவடிச் செயற்பாட்டுக்குத் தனது கடுமையான கண்டனங்களையும் தெரிவித்தார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவந்துள்ளதாவது,

முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட இந்துபுரம் கிராமத்தில் கடந்த 1977ஆம் ஆண்டு மக்கள் குடியேறி வசித்து வருகின்றனர்.

அந்த வகையில் கடந்த 1993 ஆம் ஆண்டு இந்துபுரம் கிராம மக்களின் காணிகளுக்கு அரச காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் நில அளவைப் படிவங்கள் காணவில்லை என்று தெரிவித்து கடந்த 2010 ஆம் ஆண்டில் மீண்டும் இந்துபுரம் கிராம மக்களின் காணிகள் அளவீடு செய்யப்பட்டுக் காணி அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

அதன் பிற்பாடு குளத்துக்கு உரிய ஒதுக்கீட்டுக் காணிகள் அளவீடு செய்யப்பட்டு அவற்றுக்கு முறையாக எல்லைக் கற்கள் இடப்பட்டன. மக்களின் காணிகளும் அளவீடு செய்யப்பட்டுப் புதுப்பிக்கப்பட்ட அரச காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. அதன் பின்னர் தனியார் உறுதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.





இவ்வாறு முறையாக அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு மக்களிடம் பகிர்ந்தளிக்கப்பட்ட தனியார் உறுதி மற்றும் அரச காணி அனுமதிப் பத்திரங்கள் உள்ள காணிகளையே கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களம் மீண்டும் அளவீடு செய்து, எல்லைக் கற்களையிட்டு இவ்வாறு அபகரிக்க முயற்சி மேற்கொண்டுள்ளது.

அதன் அடிப்படையில் அரச காணி அனுமதிப் பத்திரம் மற்றும், தனியார் உறுதிப்பத்திரமுள்ள 65 குடும்பங்களின் காணிகள் மக்கள் குடியிருக்கின்ற வீடுகளுடன் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில் அப்பகுதி மக்களின் முறைப்பாட்டுக்கு அமைய இந்துபுரம் கிராமத்துக்குச் சென்ற வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், நிலமைகள் குறித்து ஆராய்ந்தார். அத்துடன், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் குறித்த அடாவடிச்செயற்பாட்டுக்குத் தனது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டார்.

அத்தோடு இது தொடர்பில் உரிய தரப்பினருடன் பேசி இந்த ஆக்கிரமிப்புச் செயற்பாட்டைத் தடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

# ஆழ்வாப்பிள்ளை கந்தசாமியின் பவளவிழா நிகழ்வு



நிறைபணிச்செல்வர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமியின் பவளவிழா கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் நாளை மறுதினம் முதலாம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு பேராசிரியர் சபா ஜெயராசா வழிநடத்த திரு. கே.பொன்னுத்துரை வரவேற்க செல்வி பிரியங்கா ஆன் பிரான்சிஸ் தமிழ்மொழி வாழ்த்திசைக்க நடைபெறவுள்ளது.

சட்டத்தரணி ஜெயந்தி விநோதன், திருமதி அபிராமி கைலாயப்பிள்ளை, சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா, பேராசிரியர் வ.மகேஸ்வரன், கலாநிதி க.இரகுபரன், திரு. மா.கணபதிப்பிள்ளை, திரு.வீ.தனபாலசிங்கம், திரு. வே.செந்தில்வேலவர், கலாநிதி ஜெ.தற்பரன், திரு.ஸ்ரீகஜன், திரு.ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன், திரு.நியாஸ் ஏ சமத், திரு.ஞா.பாலச்சந்திரன், திருமதி சண்முகப்பிரியா கார்த்திகேசு, திரு.செல்வ திருச்செல்வன், திரு.சின்னத்துரை தனபாலா, கலாநிதி ந.குமரகுருபரன், திரு.ஆ.ந.இராசேந்திரன், திரு.வே.இளஞ்செழியன் ஆகியோர் வாழ்த்துரையினை வழங்குவர். திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி மகிழ்ந்துரைக்க திருமதி பவானி முகுந்தன் நயம்பட தொகுத்திட விழா நடைபெறும்.



# மொனராகலை பாடசாலை மாணவருக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள்!

## 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியில்

ஊவா மாகாணம் மொனராகலை சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கின்ற 195 மாணவர்களுக்கு 160,000 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் நேற்று (29) புதன்கிழமை வழங்கப்பட்டன.

அதி கஷ்டப் பிரதேசமாக எந்தவித அடிப்படை வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் அற்று மொனராகலை நகர் பகுதியிலிருந்து 15 கிலோ மீற்றர் பாதை சீரின்றி மலை உச்சியில் அமைந்துள்ள ஸ்ரீ கலை கிராமத்தில் உள்ள பாடசாலைக்கே இந்த உதவி வழங்கப்பட்டது.

அத்துடன் பாடசாலையின் கட்டட கட்டுமானப் பணிக்காக 100,000 ரூபா நிதியும் பாடசாலை அதிபர் மு.சுதாகரனிடம் இந்த நிதி கையளிக்கப்பட்டது.

அத்துடன் இந்தப் பாடசாலைக்கு மாதாந்தம் 10,000 ரூபாவும் பாடசாலையில் இயங்குகின்ற ஸ்ரீ கலை அறநெறிப்பாடசாலை ஆசிரியருக்கு மாதாந்தம் 10,000 ரூபாவும் ஆச்சிரமத்தால் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது

இந்த உதவித் திட்டத்தை வழங்கச் சரஸ்வதி வித்தியாலயத்துக்குச் சென்ற சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் அமுதகலாசுரபி கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளையும் தொண்டர்களையும் வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் வரவேற்றனர்.

இதன்போது மரக்கன்றுகளும் நட்டு வைக்கப்பட்டன.









# முல்லைத்தீவு பிரதேச வைத்தியசாலையில் வைத்தியர் இன்மையால் தடைப்பட்ட சேவை

## சம்பவ இடத்துக்கு விரைந்த ரவிகரன் எம்.பி.

**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு ஆதார வைத்திய சாலையில் வைத்தியர் இன்மையால் நேற்று சிறுதுநேரம் வெளிநோயாளர் பிரிவின் வைத்திய சேவைகள் தடைப் பட்டிருந்தன.

இந்த நிலையில் இது குறித்து பொது மக்களால் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் முறையிடப்பட்டதை அடுத்து, நாடாளு மன்ற உறுப்பினர் இது தொடர்பில் முல் லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் தொலைபேசியில் கலந்துரையாடி பிறிதொரு வைத்தியரை வைத்திய சேவையில் ஈடுபடுத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொண் டார்.

அத்தோடு உடனடியாக வைத்திய சாலைக்கு நேரடியாகச் சென்று வைத் திய சேவையில் ஈடுபட்டிருந்த வைத் தியருடன் கலந்துரையாடினார். வைத் திய சேவைகளைப் பெறுவதற்கு வந்த பொது மக்களுடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டு அவர்களின் குறைபாடுகளை யும் கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஊட கங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

மருத்துவத் தேவைப்பாடுகள் இங்கு அதிகமாகக் காணப்படுகின்றன. முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் இந்த தேவைப்பாடுகள் தொடர்பாக என்னிடம் ஏற்கனவே தெரியப்படுத்தியிருக் கின்றார்.



முல்லைத்தீவு பிரதேச வைத்திய சாலை மாத்திரமல்லாது, முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் காணப் படும் தேவைப்பாடுகள் தொடர்பிலும் என்னிடம் தெரியப்படுத்தியுள்ளனர்.

இந்தத் தேவைப்பாடுகள்தொடர்பில் ஏற்கனவே எம்மால் சுகாதார அமைச் சரின் கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டுள்ளது.

இந்த குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று முல்லைத் தீவு பிரதேச வைத்தியசாலையில் வெளி நோயாளர் பிரிவில் நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு வைத்தியர்கள் எவருமில்லை என, வைத்திய சேவைக ளைப் பெறுவதற்கு வருகைதந்த பொதுமக்கள் என்னிடம் முறையிட்டி ருந்தனர்.

அத்தோடு வைத்திய சேவைகளைப் பெறுவதற்கு வந்த பொதுமக்கள் அவ திப்படுவதாகவும் என்னிடம் முறையிடப் பட்டிருந்தது.

அதற்கமைய இதுதொடர்பில் முல் லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் இது குறித்து தொலை பேசியில் கலந்துரையாடியிருந் தேன்.

இந்த நிலையில் தாம் உடனடியாகப் பிறிதொரு வைத்தியரை கடமையில் ஈடுபடுத்துவதற்கு உரிய நடவடிக்கை களை மேற்கொள்வதாகத் தெரிவித்தி ருந்தார்.

அந்தவகையில் மக்களின் முறைப் பாட்டுக்கு அமைவாக முல்லைத்தீவு ஆதாரவைத்தியசாலைக்கு நேரடியாக வருகைதந்து நிலமைகளைப் பார்வை யிட்டிருந்தேன்.

இங்கு பிறிதொரு வைத்தியர் கடமை யில் ஈடுபடுத்தப்பட்டு வைத்திய சேவை யில் ஈடுபட்டுத்தப்பட்டிருப்பதை அவ தானிக்க முடிந்தது.

இங்கு நிலவும் மருத்துவத் தேவை கள், வைத்திய ஆளணிப் பற்றாக் குறைகள் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும். – என்றார்.

# அட்டாளைச்சேனை கல்வியியல் கல்லூரி புதிய பீடாதிபதியை வரவேற்கும் நிகழ்வு





**(எம்.எப்.றிபாஸ்.)**

அட்டாளைச்சேனை தேசிய கல்வியியல் கல்லூரியின் புதிய பீடாதிபதியை வரவேற்கும் நிகழ்வு கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கல்லூரியின் விரிவுரையாளர்கள், கல்விசார் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில். புதிய பீடாதிபதி பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

கல்வி அமைச்சால் வழங்கப்பட்ட நியமன கடிதத்தின் பிரகாரம் அட்டாளைச்சேனை தேசிய கல்வியியல் கல்லூ ரிக்கு ஆறாவது பீடாதிபதியாக எம்.சி. ஜுனைதீன் நியமிக் கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த காலங்களில் அட்டாளைச்சேனை தேசிய கல்வியியல் கல்லூரியின் நிதி மற்றும் நிர்வாகத்துக்கான உப பீடாதிபதியாகவும், மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதியாகவும், மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் அதிபராகவும் கடமையாற்றியுள்ளார்.

# தலவாக்கலை சிறுவர் பூங்காவை பராமரிக்குமாறு மக்கள் கோரிக்கை



(தலவாக்கலை பி.கேதீஸ்)

தலவாக்கலை நகரில் விடுதிக்கு அருகாமையில் காணப்படும் சிறுவர் பூங்கா புற்கள் மற்றும் செடி கொடிகள் வளர்ந்து காடாகக் காட்சியளிக்கிறது என்று பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

புற்கள் வளர்ந்து காணப்படுவதால் விளையாட்டுப் பொருள்களைச் சிறுவர்கள் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சிறுவர் பூங்காவில் எல்லா புறமும் புற்களும் செடிகளும் வளர்ந்து காணப்படுவதால் சிறுவர்களின் விளையாட்டு உபகரணங்களும் அழிந்து வருவகின்றன.

மேல் கொத்மலை நீர் மின் நிலையத் திட்டத்தின் நிர்மாணப் பணிகளின் ஊடாக ஜப்பானிய அரசின் நிதிப் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட தலவாக்கலை சிறுவர் பூங்கா 2012 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 14 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

அழிந்து வரும் இந்த சிறுவர் பூங்காவை சீரமைத்து சிறுவர்கள் விளையாடுவதற்கு தேவையான ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் செய்து தருமாறு தலவாக்கலை பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# போதைப் பொருள் தொடர்பான விழிப்புணர்வு மாணவர்களுக்கு விளம்பரமாக மாறுகின்றன

## தேசிய அபாயகர ஔடதங்கள் அதிகார சபையின் வட கிழக்கு இணைப்பாளர் தெரிவிப்பு





(றாசிக் நபாயிஸ்,
ஏ.எல்.எம். ஷினாஸ்)

பெரியநீலாவணை அக்பர் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான போதைப் பொருள் பாவனை தடுப்பு நிகழ்ச்சித் திட்டம் பாடசாலையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கல்முனை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் றாசிக் நபாயிஸின் ஒருங்கிணைப்பில் பாடசாலையின் அதிபர் எம்.சி. முஹம்மட் மபாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேசிய அபாயகர ஔடதங்கள் அதிகார சபையின் வட கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான உளவள ஆலோசனைத் துறை இணைப்பாளர் பஷீர் முஹம்மட் ரஸாட் கலந்து கொண்டு பிரதான கருத்துரை வழங்கினார்.

இவர் தனது கருத்துரையில்,

மாணவர்களுக்கு போதைப்பொருள் பாவனை மற்றும் அதன் தடுப்பு தொடர்பில் மிகுந்த அவதானத்தோடு விழிப்புணர்வு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

நீண்ட காலமாக நாம் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கை விழிப்புணர்வுகளை செய்திருக்கிறோம். ஆனால் அதனுடைய பாவனை அதிகரித்துச் செல்கிறது என்றால் இதற்கு என்ன காரணம்? என்பதை சிந்திக்க வேண்டும்.

பெரும்பாலான விழிப்புணர்வு வேலை திட்டங்கள் மாணவர்களுக்கு விளம்பரமாக மாறுகின்றனள. புதிய புதிய போதை பொருள்கள் அதன் பாவனைகள் தொடர்பில் நாம் மாணவர்களுக்கு காட்சிப்படுத்தி அவர்களின் மனக்கண் முன்னே கொண்டு வந்து விழிப்புணர்வுகளைச் செய்யும் போது மாணவர்கள் அந்த பொருள்களைத் தேடி நுகர ஆரம்பிக்கிறார்கள்.

எனவே மாணவர்களுக்கு போதைப் பொருள் தொடர்பில் தெளிவூட்டுவதற்கு அல்லது விளக்கமளிப்பதற்கு முறையான தொழில்நுட்ப ரீதியான பயிற்றப்பட்ட பயிற்சியாளர்களை கொண்டு விழிப்புணர்வுகள் வழங்கப்பட வேண்டும். இதனை தேசிய அபாயகர ஔடதங்கள் அதிகார சபை முன்னெடுத்து வருகின்றது. அந்த அடிப்படையில் நாம் ஒரு புதிய மாற்று உபாயத்தை கையாண்டு விழிப்புணர்வு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம் .–என்றார்.

இந்த நிகழ்வில் கல்முனை பிரதேச செயலக போதைத் தடுப்பு வளவாளர் குழுவின் உறுப்பினரும் அம்பாறை மாவட்ட செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தருமான ஒ.கே. பாத்திமா சரிபா, வளவாளர் குழு உறுப்பினரும் நாவிதன்வெளி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தருமான ஏ.எல்.எம். ஷினாஸ் ஆகியோர் கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.

# கனிய மணல் அகழ்வு, காற்றாலைத் திட்டத்துக்கு மன்னார் மாவட்டத்தில் அனுமதி வழங்க முடியாது!

## மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் மார்க்கஸ் அடிகளார் தெரிவிப்பு

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் தீவு பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு குறித்தும் இதனால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அறிந்து கொள்ள தென்பகுதியில் இருந்து சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலையத்தின் பணிப்பாளர் ஹேமந்த விதானகே உள்ளிட்ட குழுவினர் செவ்வாய்க்கிழமை (28) மன்னாரிற்கு வருகை தந்தனர்.

வருகை குறித்த குழுவினர் மன்னார் தீவு பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு இடம்பெறுகின்ற பகுதிகளுக்கு கள விஜயத்தை மேற்கொண்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அறிந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து மன்னார் பிரஜைகள் குழுவில் நேற்று புதன்கிழமை (29) மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் மார்க்கஸ் அடிகளார் தலைமையில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலையத்தின் பணிப்பாளர் ஹேமந்த விதானகே உள்ளிட்ட குழுவினர், பிரஜைகள் குழுவின் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்பு, பொது அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன் போது சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலையத்தின் பணிப்பாளர் ஹேமந்த விதானகே உள்ளிட்ட குழுவினர் மன்னார் தீவு பகுதிகளுக்குச் சென்று மக்களிடம் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து தெளிவுபடுத்தினர்.




இதன் போது கலந்து கொண்ட பிரதிநிதிகள் மன்னார் தீவில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிம மண் அகழ்வால் மன்னார் தீவில் ஏற்பட்டு வருகின்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்துத் தெளிவுபடுத்தினர்.

குறிப்பாக காற்றாலை மின் உற்பத்தியால் மீனவர்கள்,கர்ப்பிணி பெண்கள் உள்ளடங்களாக மன்னார் தீவில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

மன்னாரில் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டுத் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கனிய மண் அகழ்வால் மன்னார் தீவு அழியும் நிலை உள்ளமை குறித்தும் தெளிவுபடுத்தப்பட்டது.

கனிய மணல் அகழ்வால் ஒரு கட்டத்தில் கடல் நீர் கிராமங்களுக்குள் ஊடுருவும் நிலை உள்ளமை குறித்தும் குறித்த குழுவினருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து விசேட ஊடக சந்திப்பு இடம் பெற்றது.

இதன் போது மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் மார்க்கஸ் அடிகளார் மற்றும் சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலையத்தின் பணிப்பாளர் ஹேமந்த விதானகே ஆகியோர் கருத்து தெரிவித்தனர்.

குறிப்பாக மன்னார் தீவுப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு இந்தப் பகுதியில் தேவையில்லை என அவர்கள் தெரிவித்தனர்.

சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலையம் கடந்த 5 ஆண்டுகளாக குறித்த விடயம் குறித்து தம்முடன் இணைந்து கடமையாற்றி வருவதாக மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் மார்க்கஸ் அடிகளார் குறிப்பிட்டார்.

மக்களின் வாழ்விடங்களைப் பாதிக்காத வகையில் பெருநிலப் பரப்புகளில் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தை முன்னெடுக்க முடியும். மேலும் கனிய மணல் அகழ்வை நாங்கள் முற்று முழுதாக நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் முன் வைக்கின்றோம்.- என்றார்.





# வாழ்வாதாரம் இழந்த 100 ஓட்டோ சாரதிகளுக்கு நிதி உதவி!

(அபு அலா)

மேல் மாகாணத்தில் ஓட்டோ தொழிலில் தங்களது வாழ்வாதாரத்தை பெற்று வாழும் ஓட்டே சாரதிகள் 100 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபா நிதி உதவி வழங்கும் நிகழ்வு கொழும்பு பி.எம்.ஐ.சி.எச். இல் இடம்பெற்றது.

மனித உரிமைகள் மக்கள் பாதுகாப்பு அமைப்பின் விருது வழங்கும் நிகழ்வின் போது, யாழ்ப்பாணத்தை சேர்ந்த சமூக சேவையாளர் வா.தியாகேந்திரனின் சொந்த நிதியிலிருந்து குறித்த உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த உதவித் தொகையை மனித உரிமைகள் மக்கள் பாதுகாப்பு அமைப் பின் பிரதித் தலைவர் எப்.எம்.ஷரீக் வழங்கி வைத்தார்.



# அதிபரால் தாக்கப்பட்ட மாணவன் வைத்தியசாலையில் அனுமதி!

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் தரம் இரண்டில் கல்வி பயிலும் மாணவன் புதன்கிழமை (29) பாடசாலைக்கு தாமதமாக வந்தார் என்ற காரணத்தை மையமாக வைத்து அதிபர் குறித்த மாணவனின் வகுப்பறைக்கு சென்று தடியால் அடித்துள்ளார்.

இதன் காரணமாக குறித்த மாணவன் இரவு முழுவதும் தூங்காது சிரமப்பட்டுள்ளார். அத்தோடு வியாழக்கிழமை (30) பாடசாலைக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது விடயமாக மாணவனின் பெற்றோர் வியாழக்கிழமை (30) கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் அந்தப் பாடசாலை அதிபருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளனர். பாதிக்கப்பட்ட மாணவனைச் சிகிச்சைக்காக கற்பிட்டி வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இது பற்றிய மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# காந்தியடிகளின் 77 ஆவது சிரார்த்த தினம் காந்தி சேவா சங்கத்தினரால் அனுஸ்டிப்பு!









அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தியாவின் தேசபிதா மகாத்மா காந்தியடிகளின் 77 ஆவது சிரார்த்த தினம் இன்று (30) அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி மற்றும் அரியாலை காந்தி சன சமூக நிலையம் ஆகிய இடங்களில் உள்ள காந்தி திருவுருவ சிலைகளுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

சங்கத்தின் தலைவரும் வவுனியா பல்கலைக்கழக வேந்தருமான பேராசிரியர் சு. மோகனதாஸ், காந்தீயம் பத்திரிகை ஆசிரியரும் நிர்வாக சபை உறுப்பினருமான எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி, ஓய்வுநிலை அதிபர்களான க.செல்வக்குமாரன், செ.சுப்பிரமணியம் ஆகியோர் உட்பட சங்கத்தின் உறுப்பினர், பொது மக்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

சங்கத்தின் அதிகார பூர்வ ஏடான காந்தீயம் பத்திரிகையும் வெளியிட்டுவைக்கப்பட்டது.



# மகா கும்பமேளாவில் விசேட அனுமதி ரத்து

மகா கும்பமேளாவில் நடந்த கூட்ட நெரிசலில் சிக்கி 30 பேர் உயிரிழந்த நிலையில், பிரயாக்ராஜில் இன்று முதல் வி.வி.ஐ.பி. எனப்படும் அதி முக்கிய பிரபலங்களுக்கான சிறப்பு பாஸ் வழங்குவதை ரத்து செய்யும்படி முதல்வர் யோகி ஆதித்யநாத் உத்தரவிட்டுள்ளார்.

உத்தர பிரதேசத்தில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் புனித நீராட கோடிக்கணக்கான மக்கள் திரண்டதால் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 30 பேர் உயிரிழந்தனர். 60 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்த சம்பவத்தால் உத்தர பிரதேச அரசின் மீது பல்வேறு விமர்சனங்கள் எழுந்தன. இந்நிலையில் நேற்று பின்னிரவில் முதல்வர் யோகி ஆதித்யநாத் பொலிஸ் உயர் அதிகாரிகள், பிரயக்ராஜ், கவுசாம்பி, வாரணாசி, அயோத்தி, மிர்சாபூர், பஸ்தி, ஜவுன்பூர், சித்ர கூட், பண்டா, அம்பேத்கர்நகர், பிரதாப்கர், சண்ட் கபீர் நகர், படோடி, ரே பரேலி, கோரக்பூர் மாவட்ட ஆட்சியர்கள், உயர் அதிகாரிகள் ஆகியோருடன் காணொலி வாயிலாக முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடத்தியுள்ளார்.

அதன் அடிப்படையில் பிரயாக்ராஜில் இன்று முதல் வி.வி.ஐ.பி. எனப்படும் அதி முக்கிய பிரபலங்களுக்கான சிறப்பு பாஸ் வழங்குதலை ரத்து செய்ய உத்தரவிட்டுள்ளார். மேலும் சில வழிகாட்டு நெறிமுறைகளையும் கடைப்பிடிக்கும் படி முதல்வர் யோகி ஆதித்யநாத் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

# மேகாலயாவில் பல ஆண்டுகள் பழைமையான புதைபடிவம் திருட்டு

மேகாலயாவில் உள்ள ஒரு கிராமத்தில் இருந்து 35 முதல் 40 மில்லியன் ஆண்டுகள் பழமையான புதை படிவம் திருடப்பட்டுள்ள சம்பவம் அப்பகுதி மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு மே மாதம் மேகாலயாவின் தெற்கு காரோ மலைகளில் உள்ள டோலிக்ரே கிராமத்தில் ஒரு புதைபடிவம் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்திய புவியியல் ஆய்வு மையம் (GSI) அந்த இடத்தை ஆய்வு செய்து மாதிரிகளை சேகரித்தது. இந்த புதைபடிவம் திமிங்கலங்களின் முன்னோடிகளான அழிந்துபோன ரோடோசெட்டஸ் அல்லது அம்புலோ செட்டஸின் புதைபடிவமாக இருக்கலாம் என்று தெரிய வந்தது.

இந்த நிலையில் இந்த புதைபடிவத்தின் ஒரு பகுதியை யாரோ வெட்டி எடுத்துச் சென்றுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக சிஜு பொலிஸ் நிலைய பொலிஸார் வழக்குப்பதிவு செய்து குற்றவாளியை தேடி வருகின்றனர். மேலும் அப் பகுதிக்கு பொது மக்கள் செல்லவும் தடை விதித்துள்ளனர்.



# மக்கள் நீதி மய்யம் கட்சியிலிருந்து விலகினார் நடிகை வினோதினி!

கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம் கட்சியில் இருந்து மிகுந்த வருத்தத்துடன் வெளியேறுவதாக நடிகை வினோதினி தெரிவித்துள்ளார்.

தமிழில் பல்வேறு திரைப்படங்களில் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து பிரபலமானவர் நடிகை வினோதினி. இவர், கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம் கட்சியில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் 1 ஆம் திகதி இணைந்தார்.

இந்த நிலையில் மய்யத்திலிருந்து மிகுந்த வருத்தத்துடன் வெளியேறுவதாக என நடிகை வினோதினி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,



“அரசியல் பெரிய கடல். அதில் முத்தெடுத்து, மக்களுக்குச்சேர்க்க, தனிப்பட்ட நபரால் ஆக்கப்பூர்வமான விஷயங்கள் செய்ய தேவை - எண்ணம், சிந்தனை, செயல், பணம். என்னிடம் எண்ணமும் சிந்தனையும் மட்டுமே உள்ளது என்பதைக் காலம் புரியவைத்திருக்கிறது.

கட்சி எடுத்த பல நிலைப்பாடுகளைக் கேள்வி கேட்டிருக்கிறேன். பெருந்தன்மையோடு எனக்கு புரிய வைத்திருக்கின்றனர். யாருக்கும் கிடைக்காத அரிய வாய்ப்புக்கள் எனக்குக் கிடைத்திருக்கின்றன. தலைவரோடு நேரடியாக உரையாட, கேள்வி கேட்க, பற்பல நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைக்க, பற்பல செயல்பாடுகளை முன்னெடுக்க. ஆனால் அவற்றையெல்லாம் நான் முழுமையாக பயன்படுத்திக்கொள்ளவில்லை என்பதுதான் உண்மை.

நம்மவர் போன்ற மகத்தான தலைவனைத் தவறவிட்டது தமிழ்நாடு மட்டுமல்ல,வினோதினியும்தான். தொடர்ந்து என் எண்ணமும் சிந்தனையும் தமிழ்நாட்டு அரசியலை மையப் படுத்தியே இருக்கும். ஏனெனில், நான் பிறந்த இம்மண்ணுக்கு என் மக்களுக்கு என்னால் ஆன சிறு மாற்றத்தையாவது, குறைந்தபட்சம் சிந்தனையளிவிலாவது, இப்பிறவியில் கொண்டுவர வேண்டும் என்பது தான் என் நோக்கம். தொடர்ந்து பயணிப்போம். சமரசமற்ற நடு நிலையிலிருந்தபடியே” இவ்வாறு அதில் அவர் பதிவிட்டுள்ளார்.

இந்நிலையில் மக்கள் நீதி மய்யம் கட்சியில் இருந்து நடிகை வினோதினி விலகியுள்ளமை தமிழக அரசியல் அரங்கில் பெரும் பேசுபொருளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய மாணவர்களை குறிவைக்கிறார் ட்ரம்ப்



அமெரிக்காவில் கல்வி கற்றுவரும் வெளிநாடுகளைச் சேர்ந்த மாணவர்களின் விபரங்களைத் திரட்ட அந்நாட்டு அரசு அரசு திட்டமிட்டுள்ளதாகவும், இதனால் இந்திய மாணவர்கள் அதிகளவில் பாதிக்கப்படும் வாய்ப்புக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியவர்களை வெளியேற்றும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி வருகின்றார்.

இதன் முதற்கட்டமாக கொலம்பியாவைச் சேர்ந்த பலரை இராணுவ விமானங்கள் மூலம் அவர்களின் சொந்த நாட்டிற்கு அனுப்பி வைக்கும் செயற்பாட்டில் அமெரிக்கா ஈடுபட்டு வருகின்றது.

இந்நிலையில் தற்போது அமெரிக்காவில் கல்வி கற்றுவரும் வெளிநாட்டு மாணவர்களின் பக்கம் ட்ரம்பின் பார்வை திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனெனில், அமெரிக்காவிற்கு கல்வி கற்க வரும் மாணவர்கள் படித்து முடித்த பின்னரும் அங்கு தங்கி இருப்பதாகவும், குறிப்பாக விசாவின் கால எல்லை முடிந்த பின்னரும் அங்கு சட்டவிரோதமாக தங்கி இருப்பதாகவும், சிலர் கல்வி கற்பதற்காக வந்துவிட்டு பணிபுரிந்து வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவில் கல்வி கற்றுவரும் வெளிநாடுகளைச் சேர்ந்த மாணவர்களின் விபரங்களைத் திரட்டும் நடவடிக்கையில் அந்நாட்டு அரசு ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்தியர்கள் பலரும் வெளியேற்றப்பட வாய்ப்புகள் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 18 ஆயிரம் பேர் முதல் கட்டமாக இந்தியா கொண்டு வரப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும் முறையாக விசா பெற்று அங்கே வசிக்கும் இந்தியர்களுக்கு இதனால் பிரச்சனை இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க வட்டார தகவலின்படி அந்த நாட்டு அரசின் கணக்குப்படி அங்கே 7 லட்சம் இந்தியர்கள் சட்ட விரோதமாக குடியேறி உள்ளனர். இதில் கணிசமானோர் குஜராத்தை சேர்ந்தவர்கள். இவர்கள் எல்லோரும் மெக்சிகோ வழியாக அமெரிக்கா சென்று அங்கே தஞ்சம் அடைந்து வசித்து வருகின்றனர். இவர்கள்தான் அதிக அளவில் இந்த சட்டத்தால் பாதிக்கப்பட வாய்ப்புகள் உள்ளதாகக் கூறப்படுகின்றது.






# ஹமாஸ் தரப்பினரால் விடுவிக்கப்படவுள்ள தாய்லாந்து, இஸ்ரேலிய பணயக் கைதிகள்

காசா போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு அமைய ஹமாஸ் தரப்பினரால் பணயக் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள 8 பேர் இன்றைய தினம் விடுவிக்கப்படுவார்கள் என இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளவர்களில் 5 தாய்லாந்து பிரஜைகளும் 3 இஸ்ரேலியப் பிரஜைகளும் அடங்குகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

ஹமாஸ் மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான இணக்கப்பாட்டுக்கு அமைய மூன்றாம் கட்டமாக இன்றைய தினம் பணயக் கைதிகள் விடுவிக்கப்படுகின்றனர்.

அதேநேரம் இதற்கு ஈடாக 110 பாலஸ்தீனியர்கள் இஸ்ரேலிய சிறையிலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஹமாஸ் தரப்பினரால் இன்று விடுவிக்கப்படவுள்ள தாய்லாந்து பணயக் கைதிகளின் பெயர் விபரங்கள் பகிரங்கப்படுத்தப்படவில்லை எனச் சர்வதேச ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நடுவானில் நேருக்கு நேர் மோதிய விமானம் - ஹெலிக்கொப்டர்

வாஷிங்டன் டிசி பகுதியில் வானில் பறந்துகொண்டிருந்த அமெரிக்கன் ஏர்லைன்ஸ் நிறுவன விமானம் ஒன்று, ஹெலிகொப்டர் ஒன்றுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இத்தகவலை அமெரிக்க விமான போக்குவரத்து நிர்வாகம் தெரிவித்துள்ளது.

விபத்துக்குள்ளான விமானத்தில் 60 பயணிகள் பயணித்ததுடன் ஹெலிக்கொப்டரில் 3 இராணுவ உத்தியோகத்தர்கள் இருந்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

நேற்று இரவு 9 மணியளவில் ரீகன் வொஷிங்டன் தேசிய விமான நிலையத்தின் 33 ஆவது ஓடுதளத்தை நோக்கிச் மேற்படி விமானம் வந்து கொண்டிருந்தபோது இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.



வர்ஜீனியாவின் ஃபோர்ட் பெல்வோயரில் இருந்து வந்த இராணுவ ஹெலிக்கொப்டர் (UH-60) ஒன்றுடனே அமெரிக்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான விமானம் மோதியுள்ளது.

விபத்துக்குள்ளான விமான பொட்டோமெக் ஆற்றில் வீழ்ந்ததாகவும், விபத்துக்கான காரணம் மற்றும் உயிரிழப்புகள் குறித்த விபரங்கள் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என அமெரிக்க விமான போக்குவரத்து நிர்வாகம் தெரிவித்துள்ளது.

பக்கங்கள் 03

கனடா முரசு

வியாழக்கிழமை 30/01/2025

## வாகன கடத்தலில் ஈடுபட்டவர்கள் கைது

கனடாவில் ஆயுத முனையில் வாகன கடத்தலில் ஈடுபட்ட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர்

02



# கனடா பிரதமர் போட்டியில் இந்திய வம்சாவளி பெண்

**கனடா பிரதமர் போட்டியில் புலம்பெயர்தல் பின்னணி கொண்ட ஒரு பெண் களமிறங்கியுள்ள நிலையில், கனடாவிலிருந்து சட்டவிரோத புலம்பெயர்ந்தோர் அனைவரையும் நாடுகடத்துவேன் என அவர் உறுதியளித்துள்ளார்.**

**இந்தியாவின் பஞ்சாபிலிருந்து புலம்பெயர்ந்த பெற்றோருக்குப் பிறந்தவர் ரூபி தல்லா (வயது 50).**


**ரூபி, நடிகை, இயற்கை வைத்தியர், தொழிலதிபர், மொடல், அரசியல்வாதி என பன்முகம் கொண்டவர் ஆவார்.**

ரூபி, கனடாவின் பெண் ட்ரம்ப் என விமர்சிக்கப்படுகிறார். அதற்குக் காரணம், புலம்பெயர்தல் குறித்த அவரது கொள்கைகள், அமெரிக்க ஜனாதிபதியான ட்ரம்பின் கொள்கைகளைப்போல கடுமையாக உள்ளது தான்.

தற்போது கனடா பிரதமர் பதவிக்கு போட்டியிடப்போவதாக ரூபி தெரிவித்துள்ளார்.

அவரது வாக்குறுதிகளில் முக்கியமான வாக்குறுதியே, ஒரு பிரதமராக, நான் சட்டவிரோத புலம்பெயர்ந்தோரை நாடுகடத்துவேன், ஆட்கடத்தல் கும்பல்களை கடுமையாக கட்டுப்படுத்துவேன் என்பதுதான்.

ரூபி, மூன்று முறை நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு வரலாறு படைத்த இந்திய வம்சாவளி நாடாளுமன்ற உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.



# எரிசக்தி விநியோகத்தைத் துண்டிப்போம்; அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுக்கும் கனடா

கனடா மீதான இறக்குமதி வரிகளை அமெரிக்கா உயர்த்தினால் அவர்களுக்கு வழங்கும் எரிசக்தி விநியோகத்தைத் துண்டிப்போம் என கனடா அச்சுறுத்தியுள்ளது.

கனடா நாட்டின் மீதான இறக்குமதி வரிகளை 25 வீதம் அதிகரித்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார். இது வரும் பெப்ரவரி 1 முதல் நடைமுறைக்கு வரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சில வாரங்களுக்கு முன்பு, ஒன்டாரியோ மாகாண முதல்வர் டக் ஃபோர்ட் பேசுகையில்,

"ட்ரம்ப்பின் வரி விதிப்புகளுக்கு பதிலளிக்கும் விதமாக அமெரிக்காவிற்கான எரிசக்தி விநியோகங்களை துண்டிப்பதன் மூலம் அமெரிக்கர்களுக்கு மின்சாரம் வழங்குவதை குறைக்க கனடா தயாராக உள்ளது.

நாங்கள் மிச்சிகனுக்கும், நியூயோர்க் மாநிலத்திற்கும், விஸ்கான்சினுக்கும் செல்லும் மின்சாரத்தை துண்டிப்போம்." என்று தெரிவித்தார்.

அமெரிக்காவிற்கு வரும் இயற்கை எரிவாயு மொத்தமும் கனடாவில் இருந்தே வருகிறது. மேலும், அமெரிக்காவின் முக்கிய மின்சார விநியோகமும் கனடாவிலிருந்தே கிடைக்கிறது.

கடந்த 2023 ஆம் ஆண்டு ஒன்டாரியோ மாகாணத்தில் 15 லட்சம் அமெரிக்க வீடுகளுக்கு கனடா நேரடியாக மின்சாரம் வழங்கியது. மேலும் மிச்சிகன், மினசோட்டா, நியூயோர்க் மாகாணங்களுக்கு மின்சாரம் வழங்குவதில் கனடா முக்கிய பங்கு வகிக்கிறது.

இது தொடர்பாகப் பேசிய கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, "அமெரிக்க ஜனாதிபதி கனடா மீதான வரிகளைத் தொடர நினைத்தால், கனடா அதற்கான தகுந்த பதில்களை அளிக்கும்" எனத் தெரிவித்தார்.




# ட்ரக் வண்டி மீது துப்பாக்கிச் சூடு

கனடாவில் ட்ரக் வண்டி சாரதி ஒருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

கெனடி மற்றும் ப்ரோக்ரஸ் வீதிகளுக்கு அருகாமையில் இந்த துப்பாக்கிச்சூடு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் ட்ரக் வண்டியின் சாரதி படுகாயம் அடைந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியதன் பின்னரும் சாரதி சுமார் ஐந்து கிலோ மீற்றர் வரையில் ட்ரக்கை செலுத்தி சென்றுள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வாகனம் ஒன்றில் இருந்த நபர் சாரதி மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.

இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் பற்றிய விபரங்களை எதுவும் வெளியிடப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் டொரட்டோ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வாகனங்களை இழுத்துச் செல்லும் டிரக் வண்டி ஒன்றின் சாரதியே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயம் அடைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.






## வாகன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதின்ம வயதுடைய சிறுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடாவின் ஸ்காப்ரோ பகுதியில் ஆயுத முனையில் இந்த வாகன கொள்ளை சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த வாகன கொள்ளை சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மார்க்கம் மற்றும் ப்ரோக்ரஸ் வீதிகளுக்கு அருகாமையில் இந்த கொள்ளை சம்பவம் பதிவாகியுள்ளது.

ஹொன்டா சிவிக் ரக வாகனம் ஒன்றே இவ்வாறு களவாடப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முகமூடிகளை அணிந்து உரிமையாளரை அச்சுறுத்தி வாகனம் கொள்ளையிடப்பட்டுள்ளது.







# ஐந்து நாடுகளுக்கு செல்ல வேண்டாம்; கனேடிய அரசாங்கம் பயண எச்சரிக்கை

கனேடிய அரசாங்கம் தனது நாட்டு பிரஜைகளை ஐந்து நாடுகளுக்கு செல்ல வேண்டாம் என பயண எச்சரிக்கை விடுத்துள்ளது.

வன்முறை, குற்றங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் பற்றாக்குறை அதிகரித்து வருவதாலேயே இந்த பயண எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக கனேடிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, கரீபியன் நாடுகளான கியூபா, டொமினிகன் குடியரசு, ஜமைக்கா, பஹாமாஸ் மற்றும் மெக்சிகோவிற்கும் பயண எச்சரிக்கை வெளியிட்டுள்ளது.

கியூபாவில் ஏற்பட்ட மின்சார தட்டுப்பாடு மற்றும் அடிப்படை தேவைகளின் குறைபாடுகள் காரணமாக கனடா அரசு பயணிகளுக்கு முன்னெச்சரிக்கையாக இருக்கும்படி அறிவுறுத்தியுள்ளது.



டொமினிகன் குடியரசில் பல்வேறு குற்றங்கள், குறிப்பாக செல்வச்சின்னங்கள் அல்லது விலைமதிப்புள்ள பொருட்களை வெளிப்படையாக காட்சிப்படுத்துவதால் திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் அதிகமாக உள்ளன.

குறிப்பாக சுற்றுலா பகுதிகளில் மோட்டார் சைக்கிள் திருட்டு, வன்முறை குற்றங்கள் தீவிரமாக நடைபெறுகின்றன.

அதேவேளை ஜமைக்காவில் வன்முறை குற்றச்செயல்கள் அதிகமாக உள்ளதால், சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பாக இருக்கும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பஹாமாஸ் தீவுகளின் சில பகுதிகளில் கொள்ளை மற்றும் துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் அதிகமாக உள்ளன. சுற்றுலா பயணிகள் இரவு நேரத்தில் தனியாக செல்லாமல், பாதுகாப்பான சுற்றுலா பகுதிகளில் மட்டுமே தங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மெக்சிகோவில் கடத்தல்கள் மற்றும் வன்முறை அதிகமாக உள்ளதால் கனடா அரசு பயணிகளுக்கு முன்னெச்சரிக்கை விடுத்துள்ளது. முக்கிய சாலைகளில் ஆயுதக் குழுக்கள் வாகனங்களை நிறுத்தி தாக்குதல் நடத்துவது போன்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், இந்த நாடுகளுக்கான பயண திட்டங்களை கவனமாக மதிப்பீடு செய்து, பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளை பின்பற்றுமாறும் கனடா அரசு சுற்றுலாப் பயணிகளுக்கு வலியுறுத்தியுள்ளது.

# றொறன்ரோவில் ஒருவருக்கு எதிராக கடத்தல், கொலைக் குற்றச்சாட்டுகள்

றொறன்ரோவைச் சேர்ந்த நபர் ஒரு வருக்கு எதிராக கடத்தல் மற்றும் கொலை குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

சந்தேகநபர் ஒருவரை பல தடவைகள் சுட்டு படுகொலை செய்ய முயற்சித்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10ஆம் திகதி மிசிசாகாவில் கியூ பகுதியில் இந்த கொலை முயற்சி இடம்பெற்றதாக பீல் பிராந்திய பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட நபர் பலவந்தமாக கடத்திச் செல்லப்பட்டு பல மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என தெரிவிக்கப்படுகிறது.



அதேபோல் கடத்தப்பட்ட நபர் மீது பல தடவைகள் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு துப்பாக்கிச் சூட்டில் படுகாயம் அடைந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் பொலிஸாரினால் அடையாளம் காணப்பட்டார்.

இந்த சந்தேகநபருக்கு எதிராக பிராம்டன் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் தெரிந்தால் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.